# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213041

1. District மாவட்டம் : நாமக்கல் | PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 09/AC/2023 | Date: நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: u/s 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   1) 29.09.2023 மாலை சுமார் 4:00 மணி, 2) 07.10.2023 காலை சுமார் 11:45 மணி, 3) 10.10.2023 பகல் சுமார் 1 மணி, 4) 11.10.2023 இரவு சுமார் 7 மணி.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.10.2023 — Time : நேரம் 10:00 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.10.2023 Vol. II — Time : நேரம் 10:00 மணி.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — வாய் மொழியாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 27 கி.மீ வடக்கு.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி S. 844 குருசாமிபாளையம் தொடக்க பருத்தி கூட்டுறவு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட், குருசாமிபாளையம் இராசிபுரம் தாலுக்கா.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. லோகநாதன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மாரிமுத்து.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 42
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் நெசவுத்தொழில்
   (g) Address : முகவரி 4/54, பழைய நெசவாளர் காலனி, குருசாமிபாளையம், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பிரகாஷ், மேலாளர், S. 841 குருசாமிபாளையம் தொடக்க பருத்தி கூட்டுறவு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட், குருசாமிபாளையம், இராசிபுரம் தாலுக்கா.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

சமர்ப்பிக்கப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு மா. கோவிந்தராஜ்

13/10/2023
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 13.10.2023,
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் -13.00 மணி,

Name: பெயர் M. நல்லம்பள்ளி ..............................
Rank: நிலை .....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.ம.த.ப. பிரிவு,
நாமக்கல்

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/AC/2023 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 13.10.2023-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, திரு.M.லோகநாதன் (வயது-42), த/பெ.மாரிமுத்து, கதவு எண்.4/54, பழைய நெசவாளர் காலனி, குருசாமிபாளையம், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி வாய்மொழியாக சொன்ன புகார் வாக்குமூலம் விபரம் பின்வருமாறு:-

நான் இராசிபுரம் தாலுக்கா, குருசாமிபாளையம், பழைய நெசவாளர் காலனியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 5-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நானும் எனது மனைவி மோகானாம்பாளும் நெசவுத்தொழில் செய்து வருகிறோம். எங்களிடம் இரண்டு பெடல் தறிகள் உள்ளன. S.844 குருசாமிபாளையம் தொடக்க பருத்தி & பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்., இல் நானும் எனது மனைவியும் உறுப்பினராக உள்ளோம். எனது உறுப்பினர் எண்.4596, எனது மனைவியின் உறுப்பிளர் எண்.4555 ஆகும். சங்கத்தில் பிரகாஷ் என்பவர் மேனேஜர்-ஆக உள்ளார். எங்களுக்கு சொசைட்டியில் இருந்து நூல் பாவு மற்றும் கோன் பெற்று, நெய்து அதனை திரும்ப ஒப்படைப்போம். தற்பொழுது தமிழக அரசால் வழங்கப்படும் இலவச வேஷ்டி சேலைகளுக்கான வேஷ்டி நெய்து தருகிறோம். ஒரு பாவில் 800 மீட்டர் நூல் இருக்கும். அதில் இருந்து 200 வேஷ்டிகள் நெய்து வருகின்றோம். அந்த வேஷ்டிகளை சங்கத்தில் ஒப்படைத்தவுடன் எங்களுக்கான கூலித்தொகை கணக்கிடப்பட்டு அதில் சொசைட்டிக்கான சேமிப்பு தொகை, இன்சூரன்ஸ் ஆகியவை பிடித்தம் போக மீதித்தொகை எங்களது வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படும். சொசைட்டி மேலாளர் பிரகாஷ் அவர்கள் எங்களிடம் நெய்து கொடுக்கும் ஒவ்வொரு வேஷ்டிக்கும் கமிசனாக (லஞ்சமாக) தனக்கு தலா ரூ.5/- வீதம் ஒரு பாவுக்கு ரூ.1,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டு வந்தார். எனக்கு அந்த கமிசன் தொகை கொடுக்க விருப்பம் இல்லாததால் நான் கொடுக்கவில்லை. கடந்த 29.09.2023-ஆம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு நான் பாவு வாங்க சென்ற போது ஏன் நீங்க கமிஷன் கொடுக்கறதில்லை. அடுத்த முறை பாவு வாங்குவதற்குள் இதுவரை பெற்றுச்சென்ற பாவுக்கான கமிஷனை கொடுக்க வேண்டும் என்று சொன்னார். இவ்வளவு நாட்களாக

13/10/2023

கேட்காமல் திடீர்னு இப்படி கேட்கிறீங்க என்று சொல்லிவிட்டு வந்தேன். பின்னர் நான் கடந்த 07.10.2023-ஆம் தேதி காலை சுமார் 11.45 மணிக்கு சொசைட்டிக்கு சென்று மேனேஜர் பிரகாஷ் அவர்களை பார்த்து எத்தனை பாவுக்கு கமிஷன் கேட்கிறீங்க என்று கேட்டதற்கு நீங்க மார்ச் மாதத்தில் இருந்து எடுத்த பாவுக்கு ஒரு வேஷ்டிக்கு ரூ.5/- என்ற கணக்கில் ஒரு பாவுக்கு ரூ.1,000/- கமிஷனாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் கடந்த 10.10.2023-ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு நான் நெய்த 100 வேஷ்டியை ஒப்படைக்க சொசைட்டிக்கு சென்றபோது மேனேஜர் பிரகாஷ் என்னிடம் வேஷ்டியை பெற்றுக்கொண்டு 09.10.2023-ஆம் தேதி என்று பில் போட்டு கொடுத்துவிட்டு நோட்புக்கில் வரவு வைத்துவிட்டு, நீங்கள் என்ன வந்து தனியா பாருங்க என்று சொன்னார். பின்னர் அன்று பகல் சுமார் 1.00 மணிக்கு சொசைட்டிக்கு சென்று பிரகாஷ் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் கடந்த மார்ச் மாதம் முதல் தற்பொழுது வரை எனது மனைவி பெயரிலும் எனது பெயரிலும் சேர்த்து மொத்தம் 13 பாவுகள் எடுத்திருக்கீங்க என்று சொல்லிவிட்டு மொத்தம் ரூ.13,000/- நீங்க கமிஷன் தரணும், அதை கொடுத்துவிட்டு அடுத்த பாவு எடுத்துக்கோங்க என்று சொன்னார். நான் மொத்தமாக அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். சரி நான் யோசிச்சு சொல்றேன் என்று சொல்லிவிட்டார். பின்னர் அடுத்த நாள் 11.10.2023-ஆம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு நான் இரண்டு முறை அவருக்கு போன் செய்து அவரிடம் அவ்வளவு கமிஷன் தொகை கொடுக்க முடியாது என்றும், கொஞ்சம் கொஞ்சமாக கொடுப்பதாக சொன்னேன். அவர் பின்னர் கூப்பிடுவதாக சொல்லி போனை கட் செய்தார். பின்னர் பிரகாஷ் அவர்கள் இரவு சுமார் 7.00 மணிக்கு எனக்கு போன் செய்து எவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியும் என்று கேட்டார். நான் ரூ.3,000/- என்று சொன்னேன். சரி முதலில் அத கொண்டு வந்து கொடுங்க என்று சொன்னார். எனக்கு சொசைட்டி மேலாளர் பிரகாஷ் கேட்ட கமிஷன் தொகையை லஞ்சமாக அவருக்கு கொடுக்க விருப்பமில்லை. அதனால் அவர் மீது புகார் கொடுக்க முடிவு செய்து, அவர் லஞ்சமாக கேட்ட பணத்துடன் நாமக்கல் லஞ்ச ஒழிப்புத்துறை ஆபீஸ் வந்துள்ளேன். அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். படிக்கக் கேட்டேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு (ஒப்பம்/- xxxxxx (மா.லோகநாதன்) 13.10.23.

13/10/2023

மேற்கண்ட புகார் வாக்குமூலம் குறித்து காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் தெரிவித்து, வாய்மொழி ஒப்புதல் பெற்று புகார் வாக்குமூலத்தை படித்துப் பார்த்து, புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், வழக்கின் எதிரி திரு.பிரகாஷ், மேலாளர், S.844 குருசாமிபாளையம் தொடக்க பருத்தி & பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்., குருசாமிபாளையம், இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்பவரின் முன்நடத்தை குறித்தும் ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும், அவரின் முன் நடத்தை திருப்தியாக இல்லையென்பதும், மேற்படி திரு.பிரகாஷ் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 13.10.2023-ஆம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.09/AC/2023, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி மேற்படி எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை மாண்பமை தனிநீதிபதி/தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(M. நல்லம்மாள்) 13/10/2023
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.